**கவனிக்க.**- 09.01.2026 ஆந் திகதிய 2471 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2472 - 2026 ජනවාරි මස 16 වැනි සිකුරාදා - 2026.01.16

2472 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 76 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


73 - B 82755 - 403 (2026/01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2026

01. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்துடைய உத்தியோகத்தர்களுக்கு அங்கீ கரிக்கப்பட்டுள்ள சேவைப் பிரமாண ஏற்பாடுகளின் படி வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் 2026, ஏப்பிறல் மாதத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும், அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் எமது சேவைகள் (Our services) என்பதன் கீழ் Online Applications (Recruitment/E.B. Exams) என்பதன் மூலம் வெளியிடப்பட்டுள்ளதோடு, விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். முதல் தடவை பரீட்சைக்கு தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதன் பின்னரான தடவைகளில் தோற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தாம் தோற்றுகின்ற தடவையை சரியாக தேர்ந்தெடுத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இணையவழி ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சுப் பிரதியையும், மற்றைய தகவல்களையும் விண்ணப்பதாரியின் சான்றுரை ஒப்பத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுரை என்ற பகுதியினை பூரணப்படுத்தி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சை ஏற்பாட்டுக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சை - 2026 என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026 பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதியாகும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை கட்டாயமாக தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு, அது தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதால் ஏற்பட முடியுமான நட்டங்கள் விண்ணப்பதாரியினால் ஏற்கப்படல் வேண்டும். (பதிவிறக்கம் செய்யப்படும் விண்ணப்பத்தின் பிரதியினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுடையதாகும்.)

02. இந்தப் பரீட்சை கிராம உத்தியோகத்தர் தரம் III இன் உத்தியோகத்தர்களுக்கான பின்வரும் அட்டவணை இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் மாத்திரம் நடைபெறும். அந்த நகரங்களுக்கு உரித்தான நகர இலக்கம் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளதோடு, விண்ணப்பப்படிவத்தில் குறித்த தலைப்பில் இந்நகரம் மற்றும் நகர இலக்கம் குறிப்பிடப் பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பித்த நகரம் / நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. மேற்குறிப்பிட்ட ஏதேனும் ஒரு பரீட்சை நிலையத்துக்கு போதுமானளவு பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை காணப்படாதவிடத்து அப்பரீட்சை நிலையத்தை இரத்துச் செய்து விட்டு, அதற்கு கிட்டிய பரீட்சை நிலையத்துக்கு குறித்த விண்ணப்பதாரிகள் அனுப்பப்படுவார்கள்.

மேலும் உத்தேசிக்கப்பட்ட நகரங்கள் அனைத்திலும் அல்லது அதிக எண்ணிக்கையில் அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு போதிய அளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத விடத்து பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**அட்டவணை இலக்கம் 01: பரீட்சை நடைபெறும் நகாரங்களும் நகர இலக்கமும்**

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| யாழ்ப்பாணம் | 04 |
| மட்டக்களப்பு | 05 |
| குருநாகல் | 06 |
| அநுராதபுரம் | 07 |
| பதுளை | 08 |
| இரத்தினபுரி | 09 |

03. (i) இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு சகல விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகளுக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளானவை வர்த்தமானி அறிவித் தலில் வெவ்வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதேனும் தண்ட னைக்கு அவர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

04. **தகைமைகள்** : தற்சமயம் கிராம அலுவலர் III ஆந் தரத்துடைய அலுவலராக இருத்தல் இந்த பரீட்சைக்கு தோற்ற தகுதியுடையவராவார்.

05. பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வை யாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடை யாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரு வனவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திராதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணபதாரிகள் பரீட்சை மண்பத்தினுள் உள்நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

06. (i) **விண்ணப்பப்படிவங்கள் :** இணையவழி (Online) மூலம் கோரப்படும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் முழுமைப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பிய மென்பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பிய அச்சிடப்பட்ட பிரதி (Printout) ஆகிய இரண்டும் பரீட்சை திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர், அம்மென் பிரதி மற்றும் அச்சிடப்பட்ட பிரதியை உறுதிப்படுத்துகை (Verify) செய்யப்படுவதுடன், செல்லுபடியாகும் விண்ணப்பங்களாக திணைக் களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா/ ஏற்றுக் கொள்ளப்படவில்லையா என அமைப்பினுள் பிரவேசிக்கப் பயன்படுத்தப்படும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி மூலம் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயார்படுத்தப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாகப் பின்பற்றவும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக கருதப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(ii) **போலியான தகவல்களுக்கான தண்டனை :** விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச் சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும்.

(iii) முதற் தடவையாக இப்பரீட்சைக்கு விண்ணப் பிக்கும் உத்தியோகத்தர்களினால் பரீட்சைக் கட்டணங்கள் எதுவும் செலுத்த வேண்டிய தில்லை. எனினும், அடுத்துவரும் அமர்வுகளில் உத்தியோகத்தர்களினால் ஒரு பாடத்திற்கு ரூபா 250.00 என்ற விகிதத்தில் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது இணையவழி முறையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டண முறைமைகளின் படி மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

i. வங்கிக் கடன் அட்டை (Bank Credit Card)
ii. இணையவழி கட்டண வசதிகள் செயற் படுத்தப்பட்டுள்ள எந்தவொரு பற்றுமதி அட்டை மூலம் (Bank Debit Card with Internet Bank Facility)

iii. இலங்கை வங்கியின் இணையவழி வங்கி முறை மூலம் (Bank of Ceylon Online Banking Method)

iv. இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு - மேற்படி முறைகளின் மூலம் கட்டண செலுத்துகை இடம்பெறும் விதம் பற்றிய அறிவுறுத்தல் இணையத் தளத்தில் பரீட்சைக்கு உரித்தான தொழில்நுட்ப ஆலோசனையின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

கட்டணம் கிடைக்கப்பெற்றதாக குறுந் தகவல் (SMS)அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்துக்குரிய முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறப்பட்ட கட்டணச் செலுத்தல் முறை ஊடாக பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் பிழைகள் தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது. பரீட்சைக்காக செலுத்திய பணம் எக் காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அத்தோடு மற்றொரு பரீட்சைக்கு மாற்றப்படவும் மாட்டாது.

07. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின் படி, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அத் திகதிக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் முறையாக பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பங்களை சமர்ப்பித் துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இணையவழியாக மாத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் உடனடியாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் அதனை குறிப்பிட்டு இணையத்தளத்தில் அறிவித்தலொன்று/ விண்ணப்பதாரர்களுக்கு குறுந் தகவல் மூலம் அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் தமக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையிடம் விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றைச் சரியாக குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படுகின்ற யாதேனும் தகவலொன்றை உறுதிப்படுத்திக்கொள்ள பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியை, பரீட்சைக் கட்டணம் செலுத்துவது பற்றுச் சீட்டின் பிரதியை / பரீட்சைக்கட்டணம் செலுத்துதல் உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை மற்றும் விண்ணப்பப்படிவம் தபாலிடும் போது பதிவுத்தபாலிட்ட பற்றுச்சீட்டினை ஆயத்தமாக தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனளிக்கக் கூடும். அனுமதிச் சீட்டைச் சரிபார்த்த பிறகு ஏதேனும் திருத்தங்கள் தேவைப்பட்டால், தேர்வுத் துறையை உரிய நேரத்தில் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்தின்படி உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும். தேர்வு மண்டபத்தில் செய்யப்படும் திருத்தங்களுக்கான கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

குறிப்பு - விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக கருதப்பட மாட்டார்.

08. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப் பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத் தரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சைச் சுட்டிலக்கத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட் சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவர்கள், அவர்களுக்கு கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்பட மாட்டாது.

10. சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறும் என்பதோடு குறித்த சேவையினுள் சேர்வதற்கு தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற இந்த உத்தியோகத்தர் களால் முடியும். போட்டிப் பரீட்சையின்றி சேவைக்குள் உள்வந்த பரீட்சார்த்திகள் அவர்கள் கல்வி கற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழி ஒன்றில் இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. உத்தியோகத்தர்கள் தமது தற்றுணிவின் பேரில் வெவ்வேறான தடவைகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் வேறுவேறாக தோற்றலாம். எனினும் சித்தி பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பதினை (40%) அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். சகல பாடங்களிலும் சித்தியெய்தி பரீட்சையைப் பூர்த்தி செய்யும் ஆண்டில் பரீட்சை நடைபெற்ற இறுதித் திகதி இந்த வினைத்திறன் தடைதாண்டலை சித்தியெய்திய திகதியாகக் கருதப்படும்.

12. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதோடு, பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களிற்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும் என்பதோடு, இந்த பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் தொகுக்கப்படாத, இந்த பாடத்திற்கு உரியதாக ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலாக இருந்தாலும் எனது தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

14. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக் கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

15. **பரீட்சை நடைமுறை** :

பின்வரும் பாடங்கள் உள்ளடங்களான எழுத்து மூலப்பரீட்சை ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

**அட்டவணை இலக்கம் 02 : பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் மற்றும் உரித்தான ஏனைய விபரங்கள்**

| | *பாடம்* | *பாட இலக்கம்* | *புள்ளிகள்* | *நேரம்* |
|---|---|---|---|---|
| 01 | அலுவலக முறைமை மற்றும் கணக்குகள் | 01 | 100 | 02 மணித்தியாலம் |
| 02 | விடயம் சார்ந்த தொழில்முறை அறிவு | 02 | 100 | 02 மணித்தியாலம் |
| 03 | கணினிப் பரீட்சை எழுத்துப் பரீட்சை | 03 | 100 | 01 ½ மணித்தியாலம் |

15.1 **அலுவலக முறைமை மற்றும் கணக்குகள் ( பாட இலக்கம் - 01)**

(அ) **அலுவலக முறைமை :**

கிராம அலுவலர் அலுவலகம் மற்றும் அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் பற்றிய அடிப்படை அறிவை நடைமுறையில் பயன்படுத்தும் திறனை பரீட்சித்தல் மற்றும் கடமை ஆவணங்களை நன்கு புரிந்துகொள்ளல் மற்றும் தெளிவான மற்றும் சுருக்கமான குறிப்புகள் மூலம் ஒரு குறிப்பிட்ட முறையில் தங்கள் கருத்துக்களை / அவதானிப்புகளை முன்வைக்கும் திறனைப் பரீட்சித்தல் மற்றும் விடயம் சார்ந்த விபரங்கள் தொடர்பில் அறிக்கையை வரைவிடும் இயலுமையும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

(ஆ) **கணக்குகள் :**

கிராம அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு உரித்தான மற்றும் அரசாங்க அலுவலகங்களில் பிரயோகிக்கப்படும் அடிப்படைக் கணக்குகள் மற்றும் கணக்கு முறைமையையும், பணக் கட்டுப்பாட்டுப் பதிவேடுகளின் பணிகள், பெறுகை தொடர்பான புரிதலையும் அறிவையும் அளவிட எதிர்பார்க்கப்படுகிறது.

15.1.1 **வினாப் பத்திரம் தொடர்பான விபரம் :**

I ஆம் பாகம் - குறுகிய விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டது. வினாத் தாளிலே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
(25 புள்ளிகள்)

II ஆம் பாகம் - மூன்று வினாக்களைக் கொண்ட கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
(75 புள்ளிகள்)

**15.2 விடயம் சார்ந்த தொழில்முறை அறிவு - (பாட இலக்கம் 02)**

கிராம அலுவலர்களுக்குரிய பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அமைச்சு, திணைக்களம், மாகாண சபைகள் மற்றும் பிற சட்டரீதியான அரசாங்க நிறுவனங்கள் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பிலான அறிவினைப் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

**15.2.1 வினாப்பத்திரம் தொடர்பான விபரம் :**

I ஆம் பாகம் - சுருக்க விடைகளை எதிர்பார்க்கும் வினாக்களைக் கொண்டது. வினாத்தாளிலே விடையளித்தல் வேண்டும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம் - மூன்று வினாக்களைக் கொண்ட கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப் பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (75 புள்ளிகள்)

**15.3 கணினிப் பரீட்சை (பாட இலக்கம் - 03) :**

விண்ணப்பதாரிக்கு பின்வரும் திறமைகள் இருக்கின்றதா என்பது பற்றி ஆராய்தல் இப்பரீட்சிப்பின் நோக்கமாகும்.

I. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு

II. செயற்பாட்டுத் தொகுதி

III. கோப்பு முகாமைத்துவம்

IV. சொல் செயலாக்கம்
   i. அடிப்படை திறன்கள் திரைக்கு அறிமுகமாதல், உரைத் தொகுப்பு, உரைகளை ஒரே தொடரில் அமைத்தல் எழுத்துரு வகை மற்றும் துணைப் பந்திகள், பந்திகளின் வரிகளுக்கு இடையிலான இடைவெளி மாற்றங்கள், டெப் அமைப்பு (Tab Settings) ஒரு உரையைத் தேடல் மற்றும் மீளமைத்தல்
   ii. எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப் பிழைகள் ஒத்த சொற்கள்,
   iii. நெடுவரிசை இடல், பக்கங்களின் அமைப்பு,
   iv. ஆவணங்களை அச்சிடல், அட்டவணை அமைத்தல், ஒழுங்கு வரிசைப்படுத்துதல்,
   v. கோப்பு முகாமைத்துவம்
   vi. ஒரு ஆவணத்தை பல முகவரிகளுக்கு அனுப்பும் வகையில் தயாரித்தல்,
   vii. மைக்ரோ பயன்பாடு,

V. விரிதாள்கள்
   i. அடிப்படைத் தகைமைகள்,
   ii. வடிவமைத்தல் (Formatting),
   iii. தொகுத்தமைத்தல்,
   iv. வரிகள் மற்றும் இடைவெளிகள், புதிய செருகல்கள் மற்றும் நீக்குதல்கள்,
   v. தரவுகளை ஒழுங்குமுறையில் அமைத்தல்,
   vi. வரைபடங்களைத் தயாரித்தல்,
   vii. அச்சிடல்,
   viii. @ செயற்பாடு (@ Functions)
   ix. மைக்ரோ பயன்பாடு கோப்பு முகாமைத்துவம்,

VI. தரவுத் தளம்
- i. அறிமுகம் அடிப்படைத் தகுதிகள்,
- ii. தரவுத் தள உருவாக்கம் மற்றும் பயன்பாடு,
- iii. படிவங்கள்,
- iv. இணைந்த படிவங்கள் பொப் அப் படிவங்கள் (Popup forms)
- v. வினவல்கள் ( queries),
- vi. ஒழுங்குமுறையில் அமைத்தல்,
- vii. அறிக்கைகளைப் பெறுதல்,
- viii. மைக்ரோ பயன்பாடு,

VII. முன்வைப்புகள் / படக் குறிப்புகள்
- i. அடிப்படைத் தகைமைகள், தொகுத்தமைத்தல், வடிவமைத்தல்,
- ii. திட்டங்களை அமைத்தல்,
- iii. பதிலீட்டு கிளிப்புகளை வரைதல் மற்றும் வரைபடங்களை உள்ளீடு செய்தல்,
- iv. படவில்லைகளை மாற்றுதல் மற்றும் அனிமேஷன் விளக்கக்காட்சி கருவிகளின் பயன்பாடு,
- v. குரு (Master) காட்சி வில்லை அமைத்தல்,
- vi. காட்சிவில்லைகளை அச்சிடல் மற்றும் குறிப்புகள்,

VIII. இணையத்தள வலையமைப்பு
- i. இணையத்தளத்தை அறிமுகம் செய்தல் உலகளாவிய வலையமைப்பு
- ii. பாதைகளை கண்டறியும் விதம்,
- iii. பயன்பாட்டு இணையத்தளம்

IX. மின்னஞ்சல்(E-Mail)
- i. அறிமுகம் அடிப்படைத் தகைமைகள், மின்னஞ்சல்களைப் பெற்றுக்கொள்ளல்
- ii. மின்னஞ்சல் அனுப்புதல் மற்றும் அவற்றுக்கு பதிலளித்தல்.
- iii. இணைப்புக்களை சேர்த்தல், முகவரியைக் கண்டறிய சுருக்க பெயர் பயன்பாடு,
- iv. செய்தித் தொகுப்பு,

15.3.1 **வினாப் பத்திரம் தொடர்பான விபரம் :**

இவ்வினாப் பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளதோடு, பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள I மற்றும் II ஆம் பகுதிகள் இரண்டுக்குமுரிய நேரம் 1 ½ மணித்தியாலமாகும்.

| | | |
|---|---|---|
| I ஆம் பாகம் | - | பல்தேர்வு / சுருக்க விடையினை எதிர்பார்க்கும் 40 வினாக்களைக் கொண்டுள்ளது. (40 புள்ளிகள்) |
| II ஆம் பாகம் | - | பகுதியளவு கட்டமைக்கப்பட்ட 05 வினாக்களைக் கொண்டது. (60 புள்ளிகள்) |

15.3.2 **கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் :**

(அ) **கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்கான தகைமைகளைப் பெறும் பாடநெறிகள் மற்றும் சான்றிதழ் பத்திரங்கள் :**

2024.06.06 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்டுள்ள இலங்கை கிராம உத்தயோகத்தர் சேவையின் சேவைப் பிரமாண ஏற்பாடுகளின் படி கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு 02 இன் 06 ஆம் பந்தியின் படி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால்

வழங்கப்படும் கணினிச் செயற்பாட்டுப் பத்திரம் அல்லது கணினிச் செயற்பாட்டுப் பத்திரத்துக்குச் சமனான அல்லது அதற்கு மேற்பட்ட தரத்துடைய இரண்டாம் நிலைக் கற்கை அல்லது தொழில்முறைக் கற்கை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வழங்கப்பட்ட கணினி தொடர்பான சான்றிதழ் பத்திரத்தைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இந்த கணினி ஆற்றலைப் பரீட்சித்துப் பார்க்கும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். மேலும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிச் செயழி உதவியாளர் (NVQ மட்டம் 3) இற்கான சான்றிதழைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இந்த கணினி ஆற்றலை பரீட்சிக்கும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

(ஆ) **கணினிப் பாட எழுத்துப் பரீட்சையில் இருந்து விடுவிப்புப் பெறுவதற்கான தகைமைகளைப் பெறும் பட்டப் பாடநெறிகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பட்டத்தைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் கிராம உத்தியோகத்தர் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

(1) கணினியியல்/ தகவல் தொழில்நுட்பப் பட்டம்
அல்லது
(2) கணினியில் / தகவல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாக கற்றுள்ள பட்டம்

எஸ். ஆலோகபண்டார
செயலாளர்,
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை,
கொழும்பு 05,
2026, சனவரி 06.

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| கொழும்பு | 1103 | 01 கொழும்பு | 01 மேல் மாகாணம் |
| கொலன்னாவ | 1106 | | |
| கடுவெல | 1109 | | |
| ஹோமாகம | 1112 | | |
| ஹங்வெல்ல | 1115 | | |
| பாதுக்க | 1118 | | |
| மஹரகம | 1121 | | |
| ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை | 1124 | | |
| திபிரிகஸ்யாய | 1127 | | |
| தெஹிவளை | 1130 | | |
| இரத்மலானை | 1131 | | |
| மொரட்டுவ | 1133 | | |
| கஸ்பேவ | 1136 | | |
| | | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | 02 கம்பஹா | 01 மேல் மாகாணம் |
| கடான | 1206 | | |
| திவுலபிடிய | 1209 | | |
| மீரிகம | 1212 | | |
| மினுவன்கொடை | 1215 | | |
| வத்தளை | 1218 | | |
| ஜா எல | 1221 | | |
| கம்பஹா | 1224 | | |
| அத்தனகல்ல | 1227 | | |
| தொம்பே | 1230 | | |
| மஹர | 1233 | | |
| களணி | 1236 | | |
| பியகம | 1239 | | |
| | | | |
| பாணந்துறை | 1303 | 03 களுத்துறை | |
| பண்டாரகம | 1306 | | |
| ஹொரண | 1309 | | |
| இங்கிரிய | 1310 | | |
| புலத்சிங்கள | 1312 | | |
| மதுராவல | 1315 | | |
| மில்லனிய | 1318 | | |
| களுத்துறை | 1321 | | |
| பேருவளை | 1324 | | |
| தொடங்கொட | 1327 | | |
| மதுகம | 1330 | | |
| அகலவத்தை | 1333 | | |
| பாலிந்தநுவர | 1336 | | |
| வலள்ளாவிட | 1339 | | |
| | | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| தும்பனே | 2103 | 04 கண்டி | 02 மத்திய மாகாணம் |
| பூஜாபிடிய | 2106 | | |
| அகுரணை | 2109 | | |
| பாததும்பர | 2112 | | |
| பன்വில | 2115 | | |
| உடுதும்பர | 2118 | | |
| மினிபே | 2121 | | |
| மெததும்பர | 2124 | | |
| குண்டசாலை | 2127 | | |
| கங்கவட கோரளை | 2130 | | |
| ஹாரிஸ்பத்துவ | 2133 | | |
| ஹதரலியத்த | 2134 | | |
| யடிநுவர | 2136 | | |
| உடுநுவர | 2139 | | |
| தொலுவ | 2142 | | |
| பாதஹேவாஹெட | 2145 | | |
| தெல்தொட்டை | 2148 | | |
| உடபலாத | 2151 | | |
| கங்க இஹல கோரலே | 2154 | | |
| பஸ்பாகே கோரலே | 2157 | | |
| | | | |
| கலேவெல | 2203 | 05 மாத்தளை | |
| தம்புள்ள | 2206 | | |
| நாஉல | 2209 | | |
| பல்லேபொல | 2212 | | |
| யடவத்த | 2215 | | |
| மாத்தளை | 2218 | | |
| அபன்கங்க கோரலே | 2221 | | |
| லக்கல பல்லேகம | 2224 | | |
| வில்கமுவ | 2227 | | |
| ரத்தொட | 2230 | | |
| உகுவெல | 2233 | | |
| | | | |
| கொத்மலை | 2303 | 06 நுவரெலியா | |
| கொத்மலை மேற்கு | 2304 | | |
| ஹகுரன்கெத | 2306 | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| மதுரட | 2307 | 06 நுவரெலியா | 02 மத்திய மாகாணம் |
| வலபனே | 2309 | | |
| நில்தண்டாஹின்ன | 2310 | | |
| நுவரெலியா | 2312 | | |
| தலவாக்கலை | 2313 | | |
| அபகமுவ | 2315 | | |
| நோவூட் | 2316 | | |
| | | | |
| பென்தொடை | 3103 | 07 காலி | 03 தென் மாகாணம் |
| பலபிடிய | 3106 | | |
| கரன்தெணிய | 3109 | | |
| எல்பிடிய | 3112 | | |
| நியாகம | 3115 | | |
| தவலம | 3118 | | |
| நெலுவ | 3121 | | |
| நாகொடை | 3124 | | |
| பத்தேகம | 3127 | | |
| வந்துரப | 3128 | | |
| வெலிவிடிய திவிதுர | 3130 | | |
| அம்பலன்கொடை | 3133 | | |
| ஹிக்கடுவ | 3136 | | |
| ரத்கம | 3137 | | |
| மாதம்பாகம | 3138 | | |
| கடவத்சதர | 3139 | | |
| போபே பொந்தல | 3142 | | |
| அக்மீமன | 3145 | | |
| யக்கலமுல்ல | 3148 | | |
| இமதுவ | 3151 | | |
| ஹபராதுவ | 3154 | | |
| கோனபீனுவல | 3157 | | |
| | | | |
| பிடபெத்தர | 3203 | 08 மாத்தறை | |
| கொடபொல | 3206 | | |
| பஸ்கொடை | 3209 | | |
| முலடியன | 3212 | | |
| அதுரலிய | 3215 | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| அகுரஸ்ஸ | 3218 | 08 மாத்தறை | 03 தென் மாகாணம் |
| வெலிபிடிய | 3221 | | |
| மாலிம்பட | 3224 | | |
| கபுருபிடிய | 3227 | | |
| ஹக்மன | 3230 | | |
| கிரிந்த புஹுலுவெல்ல | 3233 | | |
| திஹகொட | 3236 | | |
| வெலிகம | 3239 | | |
| மாத்தறை | 3242 | | |
| தெவிநுவர | 3245 | | |
| திக்வெல்ல | 3248 | | |
| | | | |
| சூரியவெவ | 3303 | 09 ஹம்பாந்தோட்டை | |
| லுணுகம்வெஹெர | 3306 | | |
| திஸ்ஸமஹாராம | 3309 | | |
| ஹம்பாந்தோட்டை | 3312 | | |
| அம்பலாந்தோட்டை | 3315 | | |
| அகுணகொல பெலஸ்ஸ | 3318 | | |
| வீரகெடிய | 3321 | | |
| கடுவன | 3324 | | |
| ஒகேவெல | 3327 | | |
| பெலிஅத்த | 3330 | | |
| தங்கல்ல | 3333 | | |
| வலஸ்முல்ல | 3336 | | |
| | | | |
| கைட்ஸ் | 4103 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| சங்கானை | 4106 | | |
| சந்திலிபாய் | 4109 | | |
| தெலிப்பழை | 4112 | | |
| உடுவில் | 4115 | | |
| கோபாய் | 4118 | | |
| கரவெட்டி | 4121 | | |
| மருதன்கேணி | 4124 | | |
| பருத்தித்துறை | 4127 | | |
| சாவகச்சேரி | 4130 | | |
| நல்லூர் | 4133 | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 4136 | 10 யாழ்ப்பாணம் | 04 வட மாகாணம் |
| வேலனை | 4139 | | |
| டெல்ப் | 4142 | | |
| காரைநகர் | 4145 | | |
| | | | |
| மன்னார் | 4203 | 11 மன்னார் | |
| மாந்தை மேற்கு | 4206 | | |
| மடு | 4209 | | |
| நானாட்டன் | 4212 | | |
| முசலி | 4215 | | |
| | | | |
| வவுனியா வடக்கு | 4303 | 12 வவுனியா | |
| வவுனியா தெற்கு | 4306 | | |
| வவுனியா | 4309 | | |
| வெங்கலச்செட்டிக்குளம் | 4312 | | |
| | | | |
| துணுக்காய் | 4403 | 13 முல்லைத்தீவு | |
| மாந்தை கிழக்கு | 4406 | | |
| புதுக்குடியிருப்பு | 4409 | | |
| ஒட்டுச்சுட்டான் | 4412 | | |
| கரைதுறைப்பற்று | 4415 | | |
| வெலிஓய | 4418 | | |
| | | | |
| பச்சிளைப்பள்ளி | 4503 | 14 கிளிநொச்சி | |
| கண்டாவளை | 4506 | | |
| கரச்சி | 4509 | | |
| பூநகரி | 4512 | | |
| | | | |
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | 15 மட்டக்களப்பு | 05 கிழக்கு மாகாணம் |
| கோரளைப்பற்று மேற்கு | 5106 | | |
| கோரளைப்பற்று | 5109 | | |
| ஏறாவூர்பற்று | 5112 | | |
| ஏறாவூர் நகரம் | 5115 | | |
| மண்முனை வடக்கு | 5118 | | |
| மண்முனை மேற்கு | 5121 | | |
| காத்தான்குடி | 5124 | | |

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| மண்முனைப்பற்று | 5127 | 15 மட்டக்களப்பு | 05 கிழக்கு மாகாணம் |
| மண்முனை தென்மேற்கு | 5130 | | |
| போரதீவுப்பற்று | 5133 | | |
| மண்முனை தெற்கு | 5136 | | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | | |
| கோரளைப்பற்று மத்திய | 5142 | | |
| | | | |
| தெஹிஅத்த கண்டிய | 5203 | 16 அம்பாறை | |
| பதியதலாவ | 5206 | | |
| மஹஓய | 5209 | | |
| உஹன | 5212 | | |
| அம்பாறை | 5215 | | |
| நாவிந்தவேலி | 5216 | | |
| சம்மாந்துரை | 5218 | | |
| கல்முனை | 5224 | | |
| சாய்ந்தமருது | 5225 | | |
| காரைதீவு | 5227 | | |
| நிந்தவூர் | 5230 | | |
| அட்டாளச்சேனை | 5233 | | |
| இரக்காமம் | 5234 | | |
| அக்கரைப்பற்று | 5236 | | |
| ஆலயடிவேம்பு | 5239 | | |
| தமன | 5242 | | |
| திருக்கோவில் | 5245 | | |
| பொத்துவில் | 5248 | | |
| லாஹுகல | 5251 | | |
| கல்முனை வடக்கு உப | 5254 | | |
| | | | |
| பதவி ஸ்ரீ புர | 5303 | 17 திருகோணமலை | |
| குச்சவேலி | 5306 | | |
| கோமரன்கடவல | 5309 | | |
| மொரவெவ | 5312 | | |
| பட்டிணமும் சூழலும் | 5315 | | |
| தம்பலகாமம் | 5318 | | |
| கந்தளாய் | 5321 | | |
| கிண்ணியா | 5324 | | |

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| மூதூர் | 5327 | 17 திருகோணமலை | 05 கிழக்கு மாகாணம் |
| சேருவில | 5330 | | |
| வெருகல் / ஈச்சிலம்பத்து | 5333 | | |
| | | | |
| கிரிபாவ | 6103 | 18 குருநாகல் | 06 வடமேல் மாகாணம் |
| கல்கமுவ | 6106 | | |
| எஹடுவெவ | 6109 | | |
| அபன்பொல | 6112 | | |
| கொடவெஹெர | 6115 | | |
| ரஸ்நாயகபுர | 6118 | | |
| நிகவெரடிய | 6121 | | |
| மஹவ | 6124 | | |
| பொல்பிதிகம | 6127 | | |
| இப்பாகமுவ | 6130 | | |
| கனேவத்த | 6133 | | |
| வாரியபொல | 6136 | | |
| கொபேகனே | 6139 | | |
| பிங்கிரிய | 6142 | | |
| பமுணாகொடுவ | 6149 | | |
| மாஸ்பொத | 6151 | | |
| குருநாகல் | 6154 | | |
| மல்லவபிடிய | 6157 | | |
| மாவதகம | 6160 | | |
| ரிதீகம | 6163 | | |
| வீரபுகெதர | 6166 | | |
| குளியாபிட்டிய - கிழக்கு | 6169 | | |
| குளியாபிட்டிய - மேற்கு | 6172 | | |
| உடுபத்தாவ | 6175 | | |
| பன்னல | 6178 | | |
| நாரம்மல | 6181 | | |
| அலவ்வ | 6184 | | |
| பொல்கஹவெல | 6187 | | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | | |
| | | | |

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| கல்பிட்டி | 6203 | 19<br>புத்தளம் | 06<br>வடமேல் மாகாணம் |
| வனாதவில்லு | 6206 | | |
| கருவெலகஸ்வெவ | 6209 | | |
| நவகத்தேகம | 6212 | | |
| புத்தளம் | 6215 | | |
| முந்தளம் | 6218 | | |
| மஹகுபுக்கடவல | 6221 | | |
| ஆணமடுவ | 6224 | | |
| பல்லம | 6227 | | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | | |
| சிலாபம் | 6233 | | |
| மாதம்பே | 6236 | | |
| மஹவெவ | 6239 | | |
| நாத்தாண்டி | 6242 | | |
| வென்னப்புவ | 6245 | | |
| தங்கொடுவ | 6248 | | |
| | | | |
| பதவிய | 7103 | 20<br>அநுராதபுரம் | 07<br>வட மத்திய மாகாணம் |
| கெபிதிகொல்லாவ | 7106 | | |
| மெதவச்சி | 7109 | | |
| மஹவிலச்சிய | 7112 | | |
| நுவரகம்பலாத மத்திய | 7115 | | |
| ரபேவ | 7118 | | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | | |
| ஹொரவபொதான | 7124 | | |
| கலென்பிதுனுவெவ | 7127 | | |
| மிஹிந்தலை | 7130 | | |
| நுவரகம்பலாத கிழக்கு | 7133 | | |
| நாச்சியாதீவு | 7136 | | |
| நொச்சியாகம | 7139 | | |
| இராஜாங்கனை | 7142 | | |
| தபுத்தேகம | 7145 | | |
| தலாவ | 7148 | | |
| திரப்பனே | 7151 | | |
| கெகிராவ | 7154 | | |
| பளுகஸ்வெவ | 7157 | | |

அட்டவணை I

| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
|---|---|---|---|
| இபலோகம | 7160 | 20 அநுராதபுரம் | 07 வட மத்திய மாகாணம் |
| கல்நேவ | 7163 | | |
| பலாகல | 7166 | | |
| | | | |
| ஹிகுரக்கொடை | 7203 | 21 பொலநறுவை | |
| மெதிரிகிரிய | 7206 | | |
| லங்காபுர | 7209 | | |
| வெலிகந்த | 7210 | | |
| திம்புலாகலை | 7212 | | |
| தமன்கடுவை | 7215 | | |
| எலஹர | 7218 | | |
| | | | |
| மஹியங்கனை | 8103 | 22 பதுளை | 08 ஊவா மாகாணம் |
| ரிதீமாலியந்த | 8106 | | |
| மீகஹகிவுல | 8109 | | |
| கன்தேகெடிய | 8112 | | |
| சோரணதொட | 8115 | | |
| பஸ்ஸர | 8118 | | |
| லுணுகல | 8119 | | |
| பதுளை | 8121 | | |
| ஹாலிஎல | 8124 | | |
| ஊவ பரணகம | 8127 | | |
| வெலிமட | 8130 | | |
| பண்டாரவெல | 8133 | | |
| எல்ல | 8136 | | |
| ஹபுதலே | 8139 | | |
| ஹல்தும்பல | 8142 | | |
| | | | |
| பிபில | 8203 | 23 மொணராகலை | |
| மடுல்ல | 8206 | | |
| மெதகம | 8209 | | |
| சியபலாண்டுவ | 8212 | | |
| மொணராகலை | 8215 | | |
| படல்குபுர | 8218 | | |
| புத்தல | 8221 | | |
| வெல்லவாய | 8224 | | |

| அட்டவணை I | | | |
|---|---|---|---|
| *பிரதேச செயலகப் பிரிவு* | *பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்* | *உரிய மாவட்டம் மற்றும் இலக்கம்* | *உரிய மாகாணம் மற்றும் இலக்கம்* |
| கதிர்காமம் | 8227 | 23 மொணராகலை | 08 ஊவா மாகாணம் |
| தணமல்வில | 8230 | | |
| செவணகல | 8233 | | |
| | | | |
| எஹலியகொடை | 9103 | 24 இரத்தினபுரி | 09 சப்பிரகமுவ மாகாணம் |
| குருவிட | 9106 | | |
| கிரிஎல்ல | 9109 | | |
| இரத்தினபுரி | 9112 | | |
| இபுல்பே | 9115 | | |
| பலாங்கொடை | 9118 | | |
| கல்தொட | 9119 | | |
| ஓபநாயக | 9121 | | |
| பெல்மடுல்ல | 9124 | | |
| எலபாத | 9127 | | |
| அயகம | 9130 | | |
| கலவான | 9133 | | |
| நிவிதிகல | 9136 | | |
| கஹவத்த | 9139 | | |
| கொடகவெல | 9142 | | |
| வெலிகெபொல | 9145 | | |
| எம்பிலிப்பிடிய | 9148 | | |
| கொலொன்ன | 9151 | | |
| | | | |
| ரபுக்கன | 9203 | 25 கேகாலை | |
| மாவனல்லை | 9206 | | |
| அரநாயக | 9209 | | |
| கேகாலை | 9212 | | |
| கலிகமுவ | 9215 | | |
| வரகாபொல | 9218 | | |
| ருவன்வெல்ல | 9221 | | |
| புலத்கொஹுபிடிய | 9224 | | |
| யடியந்தொட்டை | 9227 | | |
| தெஹிஓவிட | 9230 | | |
| தெரணியகல | 9233 | | |

## கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் திட்டவரைஞர் (இலங்கைத் தொழில்நுட்ப சேவை) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பச் சேவையின் திட்டவரைஞர் பதவியிலுள்ள வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளதுடன், இப்போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழுள்ள “Online Applications-Recruitment Exams” ஊடாக பதிவேற்றப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழியாக (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். இணையவழி விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் நடவடிக்கை 2026.01.16 அன்று முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன் 2026.02.13 அன்று பிற்பகல் 9.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதி திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எவ்வித அசௌகரியங்களுக்கும் விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும்.

இப்பதவியானது கட்டிட நிர்மாணம், நவீனமயமாக்கல் மற்றும் திருத்த வேலைகளுக்குரிய மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்களுக்கு அமைய திட்டங்களைத் தயாரதத்தல், திணைக்களத்திற்குத் தேவையான மேசைகள், கதிரைகள், இறாக்கைகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றை ஆர்டர் செய்வதற்காக விலைமனு கோரல்களுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டிட நிர்மாணம், நவீனமயமாக்கல் மற்றும் திருத்த வேலைகளுக்காக வழங்கப்பட்ட கட்டணப் பட்டியல்கள் மற்றும் மதிப்பீடுகளின் கணிப்பீடுகளைப் பரிசோதித்தல் ஆகிய கடமைகளை உள்ளடக்கிய ஒரு பதவியாகும்.

01. **சேவை விதிமுறைகள் :**

அரசாங்க சேவையில் நியமனங்களை மேற்கொள்ளும்போது கையாளப்படும் பொதுவான நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக, தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் திட்ட வரைஞர் (இலங்கை தொழில்நுட்பச்சேவை) தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவியானது நிரந்தரமானது மற்றும் ஓய்வூதிய உரித்துடையது.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :**

**சம்பளக் குறியீட்டு இலக்கம்**: MN 3-2025

**சம்பளஅளவுத்திட்டம்** : ரூபா 52,250.00 – 10 × 800 – 11 x 1,190 – 10 x 1,320 – 10 x 1,350 – ரூபா 100,040.00

03. **கல்வித் தகைமைகள்:**

தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் / பொறியியல் தொழில்நுட்பவியல் / தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களுள் இரண்டு (02) பாடங்கள் உள்ளடங்கலாக மூன்று (03) பாடங்களில் க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஏதேனும் ஒரு பாடத்திற்குச் சிறப்புச் சித்தி உள்ளடங்கலாக ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

04. **தொழில்சார் தகைமைகள் :**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு, தேசிய தொழில் தகைமை NVQ மட்டம் 5 இற்குக் குறையாத சிவில் தொழில்நுட்ப பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

05. **அனுபவம் :** ஏற்புடையதன்று

06. **உடற் தகைமைகள்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் மன தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. **வேறு** :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதிக்கு முன்னதாக அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யதிருத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக் காற்றுத் தண்டனை எதற்கும் உட்படுத்தப் பட்டிருத்தல் ஆகாது. (தற்போது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம்)

08. **வயது எல்லை** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 18 இற்குக் குறையாதவராகவும் 30 இற்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இதற்கமைய, 2008.02.13 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 1996.02.13 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பிறந்திருப்பின் மாத்திரமே வயதுத் தகைமை பூர்த்தியடையும்.)

09. **ஆட்சேர்ப்பு முறைமை:**

எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை வரிசைக்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலானோர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை யானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த மொழி மூலத்திலேயே அனைத்து வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்பதுடன், விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை:**

| *வினாப் பத்திரம்* | *நேரம்* | *மொத்த மதிப் பெண்கள்* | *தேர்ச்சி மதிப் பெண்கள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவு மற்றும் உளச்சார்பு | 01 மணித் தியாலம் | 100 | 40% |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | 02 மணித் தியாலம் | 100 | 40% |

**பாடத்திட்டம் கீழ் காட்டப்பட்டுள்ளது.**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு மற்றும் உளச் சார்பு | எண்திறன், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்ட பல் தேர்வு வினாப் பத்திரம் |
| விடயம் சார் தொழில் நுட்ப பரீட்சை | **I ஆம் பகுதி**<br>சுற்றாடல், அறிவியற் கண்டுபிடிப் புகள், விஞ்ஞான அறிவு, சர்வதேச தகவல்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது (01 மணித்தியாலம்)<br>**II ஆம் பகுதி**<br>விடயம் சார் கட்டமைப்பு அல்லது பகுதி கட்டமைப்பு வினாக்களை உள்ளடக்கியது (01 மணித்தியாலம்) |

11. **பொது நேர்முகத் தேர்வு** : ஏற்புடையது

12. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்:

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக் காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள் நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத் தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப் பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை பெற்றதன் பின்னர் அதில் செய்யப்படுகின்ற எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. **பரீட்சைக்கு பிரவேசித்தல்:**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பதாரிகள் கொண்டுள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் இணைய வழியாக மாத்திரம் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடன், அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களம் இணையத்தள அறிவித்தல் அல்லது குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கும், அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவன ரீதியான பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் அது குறித்து வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும்போது, விண்ணப்பித்த பரீடசையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, இணையத்தள அறிவித்தலில் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அத்துடன், பரீட்சைத் திணைக்களம் கோரும் ஏதேனும் தகவல்களை உறுதிப் படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியை தம் வசம் வைத்திருப்பது அவசியமாகும். அனுமதி அட்டையைப் பரிசோதித்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு அமைய அத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ திருத்தங்கள் மேற்கொள்வதற்காக விடுக்கப்படும் கேரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப் பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட் சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ள தற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) அனுமதி அட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அரசாங்க நிறுவனமொன்றில் பணிபுரியும் விண்ணப்பதாரி ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவர் ஊடாகவும், ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரசாங்க பாடசாலை யொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மதங்களைச் சேர்ந்த கௌரவமான மதகுருமார்கள் ஊடாகவும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(உ) பரீட்சை நடத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை களுக்கு உட்பட நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

15. **விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்தல் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அதேபோல், பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகம் மற்றும் மின்னணுத் தொடர்பு சாதனங்கள் எதனையும் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்தது முதல் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதவாறு இருத்தல் வேண்டும்.

16. **கவனிக்கப்பட வேண்டியவை:**

அ. கோரப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

ஆ. தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள், தமது தனிப்பட்ட கோப்பில் இணைப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதியை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். அத்துடன் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

தொடர்புடைய பெறுபேற்று பட்டியலை என்னிடம் ஒப்படைப்பதற்கு மேலதிகமாக, எனது அங்கீகாரம் கிடைத்தவுடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவிப்பதற்கும், www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப் படும்.

18. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பதாரி ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது வண்ணப்பம் இரத்து செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு விடயம் தவறானது எனத் தெரிந்தே அவர் அதனைச் சமர்பபித்துள்ளார் எனத் தெரயவந்தால் அல்லது ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம். இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்க்ள தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

19. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/ பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் திட்டவரைஞர் (இலங்கைத் தொழில்நுட்பச் சேவை) பதவிக்கான திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026**

**The competitive Examination for recruitment Post of Draftman (Sri Lanka Technological Service) of the Department of Fisheries and Aquatic Resources - 2026**

| |
|---|
| பரீட்சை சட்டெண் :<br>அலுவலக உபயோகத்திற்கு |
| **பரீட்சைக்கு தோற்றும் மொழி ஊடகம் :**<br>சிங்களம் – 2, தமிழ் – 3, ஆங்கிலம் – 4 ☐<br>(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)<br>பரீட்சை ஊடக மொழியை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது |

1.0 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):..........................................
(உதா : HERATH MUDIYANSELAGE BUDDHIKA SAMPATH KUMARA GUNAWARDHANA)
..........................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
..........................................
(உதா : GUNAWARDHANA, H. M. B. S. K.)

1.3 முழுப்பெயர்: ..........................................
(சிங்களத்தில்/ தமிழில்)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................
..........................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................
..........................................

2.3 கடமை முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................
..........................................

2.4 கடமை முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................
..........................................

2.5 நுழைவுச்சீட்டு அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ..........................................
..........................................

2.6 தேசிய ஆளடையாள அட்டை : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.7 ஆண்/ பெண் : ஆண் - 0
பெண் - 1 ☐ (உரிய இலக்கத்தை கட்டத்தில் எழுதவும்.)

2.8 தொலைபேசி இல.: ☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 மின்னஞ்சல் முகவரி : ..........................................

3.0 3.1 விவாகமான/விவாகமாகாத : விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி:

| வருடம் : | | | | | மாதம்: | | | நாள் : | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

3.3 2026.02.13 ஆம் திகதிக்கு வயது:

| வருடங்கள் : | | | | | மாதங்கள்: | | | நாட்கள் : | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

4.0 கல்வித் தகைமைகள் :

4.1 க.பொ.த. (உயர் தரம்) :

4.1.1 வருடம் :

4.1.2 பரீட்சை சுட்டெண் :

| *விடயம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

4.2 க.பொ.த. (சாதாரண தரம்) :

4.2.1 வருடம் :

4.2.2 பரீட்சை சுட்டெண் :

| *விடயம்* | *பெறுபேறு* |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

4.3 தொழில் தகைமைகள் :

| *பெற்றுள்ள டிப்ளோமா* | *பெறுபேறு* | *வருடம்* | *பல்கலைக்கழகம் / நிறுவனம்* |
|---|---|---|---|
| | | | |

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின்படி உண்மையானவை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். பரீட்சை தொடர்பாக வலுவாகும் விதிகளுக்கும் பரீட்சையின் சட்டதிட்டங்களின்படி நான் தகைமையற்றவராக தென்படின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் எனது விண்ணப்பத்தை இரத்து செய்வதற்கு எடுக்கப்படும் யாதேனும் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.....................................................
திகதி:................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

01-162